# 50. வாயிலார் நாயனார்

## வேளாளர் - தொண்டை நாடு - திருமயிலாப்பூர்

இவர் மனமாகிய கோயிலில் சிவபெருமானை எழுச்செய்து ஞானச்சுடனர் விளக்கேற்றி பேரானந்தத் திருமஞ்சனமாட்டி, அன்பு என்னும் திருவமுதையமைத்து, அர்ச்சனை செய்து ஞானபூஜை செய்வார். இவ்வறாறு வழிப்பட்டு இறுதியில் சிவபெருமானது திருவடி நிழலையடைந்தார் வாயிலார்.

ராகம் : கருட்டி (28)　　　　ஆ : ஸரிமபநிஸ்

தாளம் : ஆதி　　　　அவ : ஸ்நிதபமகபரீஸ

**பல்லவி**

தொண்டை நாட்டு மயிலையில் வேளான குலத்துதித்த
வாயிலார் எனும் பெரியார் சிவ பக்தர்

**அனுபல்லவி**

தொண்டு செய்வதில் மிக விருப்பம் தொண்டு சிவ
பெருமானை தம் மனத்தே எழுந்தருள செய்தார்

**சரணம்**

ஞானத்தால் விளக்கேற்றி ஆனந்த மஞ்சனமாட்டி
அன்பமுது படைத்து அர்ச்சனை செய்து
ஞான பஜையை நாள் தோறும் செய்து
நல்லலுகம் சென்று உன்னையடைந்தாரே,

**பல்லவி**

| | | |
|---|---|---|
| பஸ்ாஸ் ஸ்ா ஸ்ா ஸ்நி நித பாபா | ம ப ம மநி தபா | மமா கரிமரிஸ |
| தொண்டை நாட்டு ம . யி . லையில் | வே . . ளா . . ள | கு லத் து தித் த . |
| ரீ , ப மாரீ ரீ, ம ரீ ஸா | ; ரிமா பநி த | பா ; ; ; |
| வா யி லார் எனும் பெ ரி யார் | சிவ ப . க் | தர் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| ஸ்ா, ஸ் நி த பா பாபநிமாபா | மா பா நீ ; | ஸ்ா , ஸ் ஸ்ாஸ்ா |
| தொண்டு செய் வ தில் . மிக | விருப் பம் | கொண்டு சிவ |
| நிஸ்ாரி.ம்ாரி.ஸ் நீ , த த நிஸ்ா | நீஸ்ா , நிதா | பா; ரிமபா |
| பெரு மா . னை . தம் மனத் தே | எழுந் தரு | ளச் செய்தார் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| மா , மா , மா ம மா மா , மா | ம பா பநித பா | மா மகரிமரிஸ |
| ஞா னத் தால் விளக் கேற் றி | ஆ . னந் . த | மஞ்சன மா . ட்டி |
| ரீ பா மாக ரீரி மா ரீஸா | ரீ , ம பா ; | பஸ்நித பாபா |
| அன்பமுது படை த்து | அர்ச்சனை | செய் . . . து |
| பா ஸ்ாநிதபா பா பநி மா பா | ம பா நீ , நீ | நீஸ்ா ஸ்ா; |
| ஞா . ன . . பூ . . சை யை | நாள் தோறும் | செய் து |
| நீ , நி நீ நித தா நீ ஸ்ா ; | ஸ்ா ; நிதபா | மக ரி ம ரீஸா |
| நல்லு ல கம் சென்று | உன் னை . ய | டை . . ந் தாரே |